


லெபனானில் நாலு வருஷத்துக்கு ஒருமுறை நாடாளுமன்றத்துக்குத் தேர்தல் நடக்கும். அதன் அடிப்படையில்தான் ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். என்றாலும், லெபனானின் பிரதமராக வருபவர் ஒரு சன்னி முஸ்லிமாகத்தான் இருக்கவேண்டும் என்று அரசியல் அமைப்புச் சட்டம் சொல்கிறது. பிரதமர் சன்னி முஸ்லிம் என்றால், சபாநாயகர் கண்டிப்பாக ஷியா முஸ்லிமாகத்தான் இருக்கவேண்டும்.

ஆறு வருடங்களுக்கு ஒருமுறை அங்கே அதிபர் தேர்தல் நடக்கும். அதிபராகப்பட்டவர் கண்டிப்பாக ஒரு கிறிஸ்துவராகத்தான் இருக்கவேண்டும். இதுவும் அரசியல் சாசனச் சட்டம்தான்.

ஏகப்பட்ட இனக்குழுக்களையும் கிறிஸ்துவ, இஸ்லாமிய, ட்ரூஸ் பெரும்பான்மையினரையும் கொண்ட லெபனான், இந்த மத, இன மக்களுக்குச் சரியான அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும் என்பதில் மிகுந்த கவனமாக இருக்கும் தேசம்.

ஆனால் கட்சி அரசியல் என்று வரும்போது, பல பணக்காரத் தனிமனிதர்கள்தான், தத்தம் இனக்குழுக்களைச் சார்ந்த கட்சிகளை உருவாக்கி வளர்ப்பதும் போஷிப்பதும் தேர்தலில் முன்னிறுத்துவதுமான காரியங்களைச் செய்கிறார்கள். இதனால் அரசாங்கம் ஒரு பக்கம் ஆள்வது போலவே, இந்தத் தனி மனிதர்களின் ராஜாங்கமும் அமோகமாக நடக்கும். இவர்களது தொகுதியில், இவர்களது கட்சியை மீறி, இன்னொரு கட்சி வெற்றி பெறவே முடியாது. ஆகவே, எந்த ஒரு அரசியல் கட்சியும் தேசம் முழுவதிலும் கொடி நாட்ட முடியாது.

நம் ஊரில் ஒரு தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் பெருவெற்றி பெற்று ஆட்சியமைப்பது மாதிரியெல்லாம் (இப்போது இங்கும் இதெல்லாம் சாத்தியமில்லாமல் போய்விட்டது!) அங்கே சாத்தியமே இல்லை. பிராந்திய இயக்கங்கள்தான் எப்போதும் அந்தந்தப் பிராந்தியங்களில் ஜெயிக்கும். அத்தனை இயக்கங்களுமே மதம் மற்றும் இனம் சார்ந்து தேர்ந்தெடுக்கப்படுபவை மட்டுமே.

உதாரணமாக, ஆதி மத்தியக் கிழக்கு கிறிஸ்துவர்கள் அதிகம் வாழும் பகுதி அல்லது தொகுதிகளில், எந்த ஒரு முஸ்லிம் கேண்டிடேட்டும் ஜெயிக்க முடியாது. கிழக்குப் பகுதிகளிலிருந்து வந்தேறிய ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்துவர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில், அந்தப் பிராந்தியத்தில் பிறந்து வளர்ந்த அரசியல் கட்சிகள் மட்டுமே தேர்தலில் ஜெயிக்கும். (எதிர்த்துக்கூட யாரும் நிற்கமாட்டார்கள்.)

இதுதவிர, கிரேக்க கத்தோலிக்கத் தொகுதிகள், ஆர்மீனியன் ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்துவத் தொகுதிகள், சன்னி முஸ்லிம் தொகுதிகள், ஷியா முஸ்லிம் தொகுதிகள், ட்ரூஸ் இனத் தொகுதிகள் என்று முழு தேசமுமே ரிசர்வ் தொகுதிகள்தாம்!

ஆகவே, கூட்டணிகளின் பலம் ஒன்றே ஆட்சியமைப்பவர்களைத் தீர்மானிக்கிறது. இந்தக் கூட்டணிகளையும் மேற்சொன்ன பணக்காரத் தனிநபர்களே பெரும்பாலும் தீர்மானிப்பார்கள்.

எழுபதுகளுக்கு முன்புவரை, லெபனானில் கிறிஸ்துவர்களின் எண்ணிக்கை அதிகம் இருந்தது. ஆனால் உள்நாட்டு யுத்தத்தை அடுத்த கணக்கெடுப்புகளின் பிறகு, கிறிஸ்துவர்களும் முஸ்லிம்களும் சரிசமமான எண்ணிக்கையில் அங்கே வசிப்பது உறுதி செய்யப்பட, இரண்டு மதங்களுமே லெபனானின் அரசியலைத் தீர்மானிக்கும் முக்கியச் சக்திகளாக ஆகிப்போயின.

1989_ம் ஆண்டு சவூதி அரேபியாவின் மத்தியஸ்தத்தின்பேரில் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. (இதற்கு டாயிஃப் ஒப்பந்தம் என்று பெயர்.) இதன் பிறகுதான் பிராந்தியவாரி பிரதிநிதித்துவம் ஓர் ஒழுங்குக்கு வந்தது. லெபனானின் அத்தனை மூலைமுடுக்குகளைச் சேர்ந்தவர்களுக்கும் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் அளிப்பது என்று முடிவு செய்தபிறகு, அந்தந்தப் பகுதிகளில் வசிக்கும் மதத்தவர்கள் தமக்கென அரசியல் கட்சிகளை உருவாக்கத் தொடங்கினார்கள்.

இதனால்தான் ஒரு முஸ்லிம் கட்சி கிறிஸ்துவப் பகுதியிலோ, கிறிஸ்துவக் கட்சி முஸ்லிம் பகுதியிலோ, பிற இனத்தைச் சேர்ந்த கட்சிகள் வேறு தொகுதிகளிலோ வெற்றி பெறுவது என்பது சாத்தியமில்லாமல் போனது.

இந்த ஏற்பாட்டின்படி, எக்காலத்திலும் லெபனானில் தனிப்பெரும் கட்சியாக, எந்த ஒரு இயக்கமும் தனித்து ஆட்சியமைப்பது என்பது முடியவே முடியாது. கூட்டணி ஆட்சிதான்... குஸ்தி, பஸ்தி தண்டால்தான்.

இந்த குஸ்தி, பஸ்தியெல்லாம் அதிகம் உபயோகப்படுத்தப்படுவது பொதுவாக, பாலஸ்தீன அகதிகள் விஷயத்தில் மட்டுமே. என்னதான் சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாவது கண்டு சிந்தை இரங்கி மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு என்றாலும், லெபனானில் வசிக்கும் முஸ்லிம் அல்லாத மக்களுக்கு இந்த அகதிகள் விஷயம் எப்போதும் அலர்ஜி.

லெபனானின் அமைதியைக் குலைக்கும் விஷயங்களில் இது தலையாயது என்கிற அவர்களது நம்பிக்கையை மாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை. பி.எல்.ஓ, லெபனானுக்கு வந்து தங்கியிராவிட்டால், ஏன் இஸ்ரேல் தங்களைத் தாக்கப்போகிறது என்பதே இவர்களுடைய கேள்வி.

ஆனால், இஸ்ரேல் தாக்குவதற்குக் காரணம் ஏதும் வேண்டாம் என்பதே மத்தியக் கிழக்கின் யதார்த்தம்.

2006_ம் வருஷத்து யுத்தத்துக்கான காரணம் என்னவென்று ஒரு கணம் யோசித்துப் பாருங்கள்! இஸ்ரேலிய ராணுவ வீரர்கள் இரண்டு பேரை ஹிஸ்புல்லா கடத்திவிட்டது என்பதுதான் காரணம். முன்னதாக லெபனானியர்கள் மூன்று பேரை இஸ்ரேல் சிறைப்பிடித்ததற்குப் பதிலாகத்தான் ஹிஸ்புல்லா இந்த நடவடிக்கையை மேற்கொண்டது என்பதையே சுலபமாக மறைத்துவிட்டார்கள்.

ஒரு மாத காலம் நீடித்த இந்த யுத்தம் தாற்காலிகமாகவாவது ஒரு முடிவுக்கு வர, ஐ.நா. மேற்கொண்ட முயற்சி என்று பிரமாதமாகச் சொல்ல ஒன்றுமில்லை. போரை நிறுத்துங்கள் என்று ஐ.நா. சொன்னதும், சரி என்று இஸ்ரேல் உடனே ஒப்புக்கொண்டதற்குத்தான் காரணம் என்ன?

எப்படி யுத்தம் தொடங்க ஒரு சரியான காரணம் இல்லையோ, அதே மாதிரிதான் யுத்தத்தை நிறுத்துவதற்கும் அவர்களுக்குக் காரணம் வேண்டாம்! தனது பலத்தை அடிக்கடி நிரூபித்துக் காட்டுவதற்கும், அண்டை நாடுகளின் எல்லைப்பகுதிகளில் எப்போதும் ஒரு பதற்றத்தை உருவாக்கி வைத்திருக்கவும், அதன் மூலம் இஸ்ரேல் மீதான மத்தியக் கிழக்கு தேசங்களின் அச்சத்தை உயிருடன் வைத்திருக்கவும்தான் இஸ்ரேல் யுத்தங்களைத் தொடங்கி, நடத்தி, நாசங்களை உருவாக்கி, பிறகு நிறுத்திக் கொள்கிறது.

இதில் ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாவது குறித்து அவர்களுக்குக் கவலை கிடையாது. ஏராளமான நகரங்கள் நாசமாவது பற்றி அக்கறை கிடையாது. பொருளாதாரம் சீர்குலைவதைக் குறித்துக் கிஞ்சித்தும் அனுதாபம் கிடையாது.

யுத்தங்களைப் பொறுத்தவரை, இஸ்ரேலுக்குப் போரிடுவது ஒன்றுதான் நோக்கமே தவிர, காரணமோ, விளைவுகளோ அல்ல. இது, அமெரிக்காவிடமிருந்து அத்தேசம் பெற்ற சீதனம்.

இதனைத் தெளிவாக உணர்ந்த காரணத்தால்தான் ஹிஸ்புல்லாவின் ராணுவப் பிரிவு (அல்லது ஜிஹாத் பிரிவு) இஸ்ரேல் விஷயத்தில் சமரசத்துக்கு இடமில்லை என்று, இன்றுவரை எந்த ஒரு பேச்சுவார்த்தைக்கும் சம்மதிக்காமல் தொடர்ந்து மல்லுக்கட்டிக்கொண்டிருக்கிறது.

இதைப் புரிந்துகொண்டதனால்தான், தற்போதைய லெபனான் அரசாங்கத்தின் பிரதமர், ஃபாத் சினியோராவும் (Fouad Siniora) ஹிஸ்புல்லாவின் யுத்தத்துக்குத் தம் சம்மதத்தை மௌனமாக அளித்துக்கொண்டிருக்கிறார்.

இவை ஒருபுறமிருக்க, லெபனான் அரசியலில் ஹிஸ்புல்லாவின் சிவிலியன் பிரிவு ஈடுபடத் தொடங்கி, சாதித்த காரியங்களைக் கொஞ்சம் பார்க்கவேண்டும்.

ஹிஸ்புல்லா தொடங்கப்பட்டபோது அறிவிக்கப்பட்ட அதன் நோக்கம், இரண்டு உட்பிரிவுகளைக் கொண்டதாக இருந்தது. ''தெற்கு லெபனானிலிருந்து இஸ்ரேலை விரட்டுவது, லெபனான் மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் கொண்டுவருவது.''

இஸ்ரேலை விரட்டும் காரியத்துக்கு ராணுவப் பிரிவு, மக்கள் பணிக்கு ஒரு சிவிலியன் பிரிவு என்று திட்டமிட்டுத்தான் ஆரம்பித்தார்கள்.

இந்த சிவிலியன் பிரிவின் செயல்பாடுகளைக் கீழ்க்கண்டவாறு பட்டியலிடலாம்:

ஏழை முஸ்லிம் மக்களுக்கு அடிப்படைக் கல்வி வழங்குதல்.

வசதியற்றவர்கள் அவஸ்தைப்படாமல் இருக்க, சாத்தியமுள்ள அத்தனை இடங்களிலும் இலவச மருத்துவமனைகள் நடத்துதல். பணக்காரப் பகுதிகளில் நல்ல நட்சத்திர அந்தஸ்துள்ள மருத்துவமனைகளை நடத்தி, அதில் வரும் பணத்தைக் கொண்டு இலவச மருத்துவமனைகளை நடத்துதல்.

எப்போதும் யுத்தங்கள் நடக்கும் தேசமென்பதால் செய்திகளை மக்களுக்கு உள்ளது உள்ளபடி கொண்டு சேர்க்க செய்தி நிறுவனங்கள் நடத்துதல்.

இயற்கை வளம் உள்ள லெபனானின் நீர் ஆதாரங்களைச் சரியாகப் பயன்படுத்தி நவீன வேளாண்மை உத்திகள் மூலம் விளைச்சலை அதிகப்படுத்துதல்.

ஏழை முஸ்லிம் பெண்கள் சுயமாகத் தொழில் செய்து வருவாய் ஈட்டுவதற்கு உதவியாக சிறுதொழில் வகுப்புகளை கிராமம் தோறும் நடத்துதல்.

போரினால் பாதிக்கப்படும் இடங்களை உடனுக்குடன் சீரமைத்துத் தருதல்.

இந்த ஆறு அம்ச செயல்திட்டத்துடன் ஹிஸ்புல்லாவின் சிவிலியன் பிரிவு களத்தில் இறங்கியது.

லெபனானின் தெற்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் பெருமளவில் வசிக்கும் ஷியா சமூகத்தினரிடையே, ஓரளவு கல்வியறிவு பெற்றவர்கள் அத்தனை பேரையும் அணுகி, அவரவர்

வசிக்கும் பகுதியில் வகுப்பெடுக்க முடியுமா என்று கேட்டு கேன்வாஸ் செய்ய ஆரம்பித்தார்கள்.

சம்மதிப்பவர்கள் வீட்டுத் திண்ணையேதான் பள்ளிக்கூடம். மாணவர்களுக்கான நோட்டுப்புத்தகங்கள் உள்ளிட்ட அத்தனை தேவைகளையும் ஹிஸ்புல்லா நிறைவேற்றும். ஆசிரியராகப் பணியாற்றுபவருக்கும் ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்படும்.

இந்த ஏற்பாடு தவிர, ஹிஸ்புல்லாவே லெபனானின் பல்வேறு மாவட்டங்களில் மொத்தமாகப் பன்னிரண்டு பெரிய பள்ளிக்கூடங்களை நடத்திக்கொண்டிருக்கிறது. எந்தப் பள்ளிக்கூடத்திலும் ஃபீஸ் என்கிற பெயரில் நயா பைசா வாங்குவதில்லை. படிப்பில் ஆர்வமுள்ள குழந்தைகள் யார் வேண்டுமானாலும் வந்து படிக்கலாம் (அஃப்கோர்ஸ், முஸ்லிம் குழந்தைகள்).

இந்த முறையான பள்ளிக்கூடங்கள் தவிர, மதக்கல்வி அளிக்கும் பள்ளிகளையும் ஹிஸ்புல்லா நடத்துகிறது. பாகிஸ்தான் போன்ற சில முஸ்லிம் தேசங்களில் மதரஸாக்கள் பெரும்பாலும், தீவிரவாதிகளின் கூடாரங்களாகச் செயல்படுவதோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், ஹிஸ்புல்லாவின் மதரஸாக்கள் இருக்கும் இடத்திலிருந்து நூறு மீட்டர் தொலைவுவரை ஆயுதம் ஏந்திய ஹிஸ்புல்லா போராளிகளே கூட வரக்கூடாது என்கிற உத்தரவு வினோதமாகத்தான் தெரியும்.

கல்விக்கு அடுத்தபடி ஹிஸ்புல்லா கவனம் செலுத்தும் அடுத்த துறை மருத்துவம். 'ஜிஹாத் அல் பினா' என்கிற ஹிஸ்புல்லாவின் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நான்கு பெரிய மருத்துவமனைகளையும், பன்னிரண்டு க்ளினிக்குகளையும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த மருத்துவமனைகளின் சார்பில் லெபனான் முழுவதும், ஆண்டுதோறும் ஒவ்வொரு இடமாக மருத்துவ முகாம்கள் நடத்தி, சுகாதார விழிப்புணர்வு, எயிட்ஸ் விழிப்புணர்வு போன்றவற்றைப் பரப்புகிறார்கள். அடிப்படை வசதிகள் கூட இல்லாத குக்கிராமங்கள்தான் ஹிஸ்புல்லாவின் முதல் இலக்கு. அந்தப் பகுதிகளுக்குப் போய் மருத்துவ முகாம்கள் நடத்தி, இலவச மருந்துகள், கண் சிகிச்சை, இருதய நோய் சிகிச்சைக்கான ஆலோசனைகள் என்று என்னென்ன தேவையோ, அவை அனைத்தையும் செய்வதுடன் மட்டுமல்லாமல் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வது குறித்து செய்முறை விளக்க நிகழ்ச்சிகளையும் ஹிஸ்புல்லா நடத்துகிறது. சுத்தமான கிராமங்களுக்கு ஆண்டுதோறும் பரிசு கூட வழங்குகிறார்கள்!

அடுத்தது, ஹிஸ்புல்லாவின் விவசாய மையங்கள். தெற்கு லெபனானில் ஒன்றும், வடக்கு லெபனானில் ஒன்றுமாக இரண்டு மையங்களை ஹிஸ்புல்லா நடத்துகிறது. இந்த விவசாய மையங்களின் நோக்கம், நவீன வேளாண் உத்திகளை மக்களிடையே சொல்லித்தருவது. தேவையான பயிற்சிகளை அளிப்பது.

இதற்காக, தேர்ந்த விவசாய வல்லுநர்களை மத்தியக் கிழக்கு முழுவதிலுமிருந்து ஹிஸ்புல்லா லெபனானுக்கு வரவழைக்கிறது. ஒரு விவசாயப் பல்கலைக்கழகத்தை உருவாக்க வேண்டும் என்று நஸ்ருல்லா கடந்த சில ஆண்டுகளாகவே பேசிவருகிறார். எப்படியும் விரைவில் அதுவும் சாத்தியமாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஹிஸ்புல்லாவின் இத்தகைய சமூகப் பணிகள், லெபனான் மக்களிடையே மிகப்பெரிய நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கிறது. தங்களை அரசாங்கம் கைவிட்டாலும் ஹிஸ்புல்லா கைவிடாது என்கிற நம்பிக்கை. ஹிஸ்புல்லா எதைச் செய்தாலும் அது சரியாகத்தான் இருக்கும் என்கிற கண்மூடித்தனமான நம்பிக்கை அவர்களுக்கு உருவாகியிருப்பதற்கான காரணம், மேற்சொன்ன இந்தச் சமூகப் பணிகள்தான். இந்தச் சமூகப்பணிகள்தான் ஹிஸ்புல்லாவின் தீவிரவாத நடவடிக்கைகளைக்கூட நியாயப்படுத்தும் காரணிகளாகச் செயல்படுகின்றன.